# தகவல் பாலம்

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு
## OUR LADY OF GOOD HEALTH PARISH

131 Birchmount Road,Scarborough,ON M1N 3J7- (*Birchmount & Danforth Ave.*)

Volume -1 Issue -20 September-2024


## PASTORAL STAFF

**Fr. Charles W. Collins**
*Pastor*

**Maureen Rajadurai**
*Parish Secretary*

## MASS SCHEDULE

Sundays - 12:30 pm
- 04:30 pm
Tuesdays - 07:00 pm
First Fridays - 07:00 pm

## ONLINE STREAMING SITES

https://www.olghtamilparish.com/
https://www.facebook.com/OLGHTamilparish
https://www.youtube.com/olghtamilparish
OLGH TV (Eagle TV-977&Star TV 1450)



இன்முகத்துடன்
வரவேற்கின்றோம்

**வருக! வருக!!**

எமது பாதுகாவலியின் திருநாள் திருப்பலியை
ஒப்புக்கொடுக்க வருகை தந்துள்ள
யாழ் மறை மாவட்ட குரு முதல்வர்
அருட்பணி P.J. ஜெயரட்ணம் அடிகளாரை
பேரன்புடனும் பெருமதிப்புடனும்
வரவேற்கின்றோம்.



## ஆரோக்கிய அன்னையின் திருநாள் நல்வாழ்த்துக்கள் 2024



கனடா வாழ் கத்தோலிக்க
இறை மக்கள்
கனவுகள் மெய்ப்பட
வேண்டும்
பொருள் கைப்பட
ஆன்மீகப் பாதை
ஆரோகணமாக
ஆரோபணமாக
ஆர்த்தெழ
ஆரோக்கிய
அன்னையின்
அருள்மழையில்
நனைவீர்!
நலம்பெறுவீர்!!

அன்னை உதித்த
இந்நன்நாள்
அவனியின்
பொன் நாள்
வாழ்க அன்னையே!
பொழிக
உம் ஆசீரை!!



### யாழ்.மறைமாவட்ட குருமுதல்வரின் ஆசிச் செய்தி

கனடா, ரொறன்ரோ புனித ஆரோக்கிய அன்னை ஆலய பங்கு திருஅவை தனது திருநாளை கொண்டாடுகின்ற இவ்வேளையில் பங்குத்தந்தை அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிளாருக்கும் ஆரோக்கிய அன்னை பங்கைச் சேர்ந்த அனைத்து இறைமக்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பலசவால்கள் மத்தியிலும் இறைமக்கள் தமது கத்தோலிக்க விசுவாச வாழ்வில் மிகவும் அர்ப்பணிப்போடு வளர்ந்து வருவதற்கு இப் பங்கு திருஅவை ஆற்றி வருகின்ற பணி மிக பாராட்டுதற்குரியது.

தமது விசுவாச வாழ்வில் வளர்ந்து வருகின்ற அதேவேளையில் இந்த பங்கு திருஅவையைச் சேர்ந்த இறைமக்கள் தமது தாயக மக்களை மறந்துவிடாது தங்களுடைய தாராள உதவிகளை செய்து அவர்களுடைய வாழ்வுக்கு ஒளி ஏற்றி வருவதையும் இந்த வேளையிலே நன்றியோடு நினைவு கூறுகின்றோம். இப் பங்கு திருஅவையின் அனைத்து செயல்பாடுகளையும் மிகுந்த அர்ப்பணிப்போடு மிகவும் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் பங்குத்தந்தை அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாருக்கும் அவருக்கு உதவியாக இருக்கின்ற அருட்தந்தை பீட்டர் ஜிதேந்திரன் அடிகளார் மற்றும் அனைத்து ஆலய சபைகளின் பணியாளர்களுக்கும் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும், இறை ஆசீரையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆருட்பணி P. J. ஜெயரட்ணம்
குருமுதல்வர்

### நன்றி நவில்கின்றோம்



கனடா வாழ் தமிழ்
கத்தோலிக்க இறை மக்கள்
தூய ஆரோக்கிய அன்னை
பங்கு திரு அவையாக
கடந்த 30 ஆண்டு
காலமாக பயணிக்க
ஆக்கமும் ஊக்கமும் தந்த
ரொறன்ரோ உயர்மறை
மாவட்டத்திற்கும் அதன்
தற்போதைய பேராயர்
பேரருட்திரு பிரான்சிஸ்
லியோ ஆண்டகை
அவர்களுக்கும் எம்
நெஞ்சார்ந்த நன்றிகள்


Phone -416-264-OLGH(6544) Fax - 416-264-6545 Email- office@olghtamilparish.com - www.olghtamilparish.com



## தூய ஆரோக்கிய அன்னைப் பங்குத் தந்தையின் இதயத்திலிருந்து...

மரியன்னையின் பிறப்பு விழாவையொட்டி வெளிவரும் எமது **தகவல் பாலம்** வழியாக உங்களை சந்திப்பதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த வாரம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குடும்ப வாழ்வின் தூய்மை தன்மை பற்றி விபரித்திருந்தார். இம்மடல் வழியாக திருத்தந்தையின் கருத்துக்களை கோடிட்டு காட்ட நானும் விரும்புகின்றேன். செப வாழ்வின் வழியாகவும் வீட்டில் உள்ளகுடும்ப உறவினர்களிடம் தன்மையாக, மென்மையாக நடந்து கொள்வது வழியாகவும், பெற்றோர்களை, பெரியோர்களைமரியாதையாக நடத்துவதன் வழியாகவும், நாம் எமது தூய்மையான வாழ்வை குடும்பத்தில் வெளிப்படுத்துவது இக்காலத்தில் அவசியமாகின்றது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எதிர்வரும் 2025ம் ஆண்டை ஜூபிலி ஆண்டாக அறிவித்துள்ளார். நாம் யூபிலி ஆண்டை எதிர்கொள்ளும் போது எமக்குள் ஒரு புதுப்பித்தல் ஏற்பட்டிருக்க வேண்டும் என திருத்தந்தை விரும்புகின்றார்.

இப் புதுப்பித்தலே நாம் அகில உலக திருஅவையாக கூட்டொருங்கியக்கமாக பயணிக்க வழி சமைக்கும் என்பது திருத்தந்தையின் பெரும் நம்பிக்கையாகும். எனவே நாம் நமது பாதுகாவலியாம் தூய ஆரோக்கிய அன்னையின் விழாவை கொண்டாடி மகிழும் வேளை நமது குடும்பங்களுக்கு என்று ஒரு தனித்துவமான ஆன்மீகத்தைக் கட்டி எழுப்புவோம். நாமும் நமது பிள்ளைகளும் இறைநம்பிக்கை வாழ்வில் வேரூன்ற வேண்டிய அடிப்படை அலகுகளான செப, தப, தான, தர்ம புண்ணியங்களில் ஈடுபட்டு ஜூபிலி ஆண்டை இறைவனுக்கு ஏற்றபடி கொண்டாடி மகிழ தகுதி பெறுவோமாக.

**ஆரோக்கிய அன்னையின் திருநாள் நல்வாழ்துக்கள்**

அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்
பங்குத்தந்தை



## கனடா வாழ் தமிழ் கத்தோலிக்க இறை மக்களின் இறை நம்பிக்கை வாழ்வு ஆழமானது

கடந்த சில வாரங்களாக ரொறன்ரோ புனித ஆரோக்கிய அன்னை பங்குத்தளத்தில் தங்கியிருந்து பணியாற்றிய வேளை கண்டவற்றையும் உணர்ந்தவற்றையும் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் இறை மக்கள் தமது இறை விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றி வாழ்வதைக் காண முடிந்தது. ஞாயிறு திருப்பலிகளில் தகுந்த ஆயத்தத்துடன் இணைதல், பொதுநிலையினருக்குரிய உரிமைகளையும், கடமைகளையும் அறிந்து தெரிந்து ஏற்று வழிபாடுகளில் பங்கேற்றல், திரு இசையால் வழிபாடுகளை மெருகூட்டல், ஒற்றுமையாகச் செயற்படல், தாயகத்துப் பங்குத் திருநாட்களை ஒரே குழுமமாகக் கொண்டாடி மகிழ்தல், புனிதர்களின் நவநாட்களை அனுஷ்டித்தல் என்பன கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய சிறப்பான விடயங்களாகும்.

கோடை விடுமுறையில் இளையவர்கள் கூடி வந்து அன்பின் பகிர்தலிலும் இராவுணவிலும் பங்கேற்ற முறைமை என் மனதைக் கவர்ந்தது. இளையவர்கள் பல வகைகளில் விமர்சிக்கப்படும் இக்காலத்திலும், பல சவால்களை எதிர்கொள்ளும் வேளையிலும் பெற்றோரின் வழிகாட்டலில் இந்நிகழ்வானது பங்குத் தந்தையின் ஒழுங்குபடுத்தலில் சிறப்பாக நடந்தேறியமை பாராட்டத்தக்கது.

இளையவர்களிடம் தமிழர் பாரம்பரியக் கலைப் பொக்கிஷம் பகிரப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றமை மெச்சப்பட வேண்டியதொன்றாகும். குறிப்பாக நாட்டுக்கூத்து கலைவடிவமானது தமிழ் வழி மறை வளர்ப்பு முறைமையில் ஆற்றுகைகளாக கனடா வாழ் இளையவர்களின் பங்கேற்றலில் அரங்கேறியமை நம்மவரின் விசுவாச வாழ்வின் சாட்சிய மறை அறிவிப்பாகவே அன்னிய மண்ணில் காட்சியளித்தது.

ஆக கனடா வாழ் தமிழ் கத்தோலிக்க இறை மக்களின் இறை நம்பிக்கை வாழ்வு நாளுக்கு நாள் மிக ஆழமாக வளர்ந்து வருகின்றது என்பதே என் அனுபவமாகும்.

அருட்பணி எஸ்.ஏ.றொஷான்
ஆசிரியர்- **பாதுகாவலன்**
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
யாழ்ப்பாணம்



## இளையோரின் பங்களிப்பு பாராட்டுதலுக்குரியது

ரொறன்ரோ மறை மாவட்டத்தின் தமிழ் கூறும் கத்தோலிக்க இறைமக்கள் அன்னை மரியாவின் பிறந்த நாளில் தங்களது ஆரோக்கிய அன்னையின் பங்குத்தள திருவிழாவைக் கொண்டுவது பெருமகிழ்ச்சிக்குரிய செயலாகும். இவ்வேளையில் உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துவதில் பெரு மகிழ்சியடைகிறேன். இவ் வருடம் ஜூன், ஜலை மாதங்களில் உங்கள் மத்தியில் திருப்பலிகள், மறையுரைகள் மற்றும் கருத்தமர்வுகள் எனப் பல ஆன்மீக நிகழ்வுகளில் பங்காற்ற எனக்குக் கிடைத்த வாய்ப்புக்களை எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். வளம் பொருந்தியதும் பல் கலாச்சார கனடா சமூகத்தில் குடியமர்ந்துள்ள நீங்களும் உங்கள் பிள்ளைகளும் உங்களது நிகழ்கால எதிர்கால முன்னேற்றத்தின் நிழலாக வழிநடத்தி ஆசீர் வழங்கும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். அண்மைக் காலத்தில் தமிழர் இருப்பிடங்கள் விரிவுபடுத்தப்பட்ட ரொறன்ரோ நகர்ப்பகுதிகளை நோக்கிச் செல்வதால் தமிழ் கத்தோலிக்கர் ஞாயிறு தோறும் ஒன்றுகூடுவது மிகவும் கடினமானதாகும். இருப்பினும், அவர்கள் வாழும் பங்கு ஆலயங்களில் இணைந்து, ஆன்மீக வாழ்வைக் கட்டி எழுப்புவது அவசியமானதாகும். பல சவால்கள் மத்தியிலும் தமிழ் கத்தோலிக்க பணிகளில் தற்போதைய இளையோரின் ஆர்வமும் பங்களிப்பும் அதிகரித்துவருவது பாராட்டுதலுக்குரியது. செயற்கை நுண்ணறிவு போன்ற பல துறைகளிலும் துரித முன்னேற்றங்கள் காணும் சமூகத்தில் உடனிருந்து ஆசீரும் அருளும் தரும் இறைவனை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். தங்களது ஆன்மீக வாழ்வில் மேலும் உறுதிகொண்டு, அன்னை மரியாவை முன் மாதிரிகையாக ஏற்று கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ இறை ஆசீரோடு கூடிய அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன். எனது பணியை புலத்திலும் ஆற்றுவதற்கு சந்தர்ப்பத்தை அமைத்துத் தந்த அயராது உழைத்து வரும் அருட்பணி. சாள்ஸ் கொலின்ஸ் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதோடு அவரது பணி சிறக்க வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

அருட் பணி. அ. ஜீவா போல் அ.ம.தி

## Our Alter Servers




Our parish is blessed with a group of dedicated children who serve at the altar with love and commitment. They play a vital role in our liturgies, assisting the priest and enriching our worship experience. Their dedication is a beautiful example of serving the Lord with joy. We invite more young hearts to join this meaningful ministry. By becoming an altar server, you'll not only grow in your faith but also contribute to the spiritual life of our community.




Welcome back to another school year! Stay tuned for more events on growing strong in our faith, giving back to our community, and having fun!

1. Children's Liturgy sessions will begin on September 15 during 12:30 and 4:30 pm masses.
2. Youth Formation, practice for Oli Vizha, and Tamil Heritage Month will take place on Sundays from 2 - 4 pm. The start date is soon to come.
3. Zoom Prayer meetings to resume on Mondays at 8:45 pm.
   ID: 810 8681 1220 Password: OLGH
4. Every 3rd Sunday of each month, there is a Youth Mass at 4:30 pm.
   We will also be incorporating English readings so everyone has an opportunity to participate.

**We hope to see more Youths join our wonderful ministry! Please contact the Parish Office for more details.**

# திருத்தந்தையின் ஆசியா, ஓசியானியா திருப்பயணம்



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்தோனேசியா, பாப்புவா நியூ கினி, கிழக்கு திமோர் மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கான தன் திருத்தூதுப் பயணத்தைத் துவக்கி உள்ளார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இந்த 45ஆவது திருப்பயணம் தான் 32 ஆயிரத்து 814 கிலோமீட்டர் என்ற வகையில் அதிக தூரத்தைக் கொண்டுள்ளதாக உள்ளது. திருத்தந்தையின் இத்திருத்தூதுப் பயணம் பல விடயங்களில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளது. இதுவரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொண்ட திருப்பயணங்களுள் அதிகப்படியான நாட்களைக் கொண்ட திருப்பயணம் என்றால் அது 2015ஆம் ஆண்டு செப்டம்பரில் அவர் கியூபா, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் ஐ.நா. நிறுவனத்திற்கு மேற்கொண்ட திருப்பயணம். அதிலும் இது அமெரிக்க ஐக்கிய நாட்டில் இடம்பெற்ற குடும்பம் குறித்த எட்டாவது பன்னாட்டு கருத்தரங்கில் பங்குபெற திருத்தந்தை சென்ற திருப்பயணம்.

இந்த திருப்பயணத்தில் தான் அதிகபட்சமாக 8 நாட்கள் 23 மணி 45 நிமிடங்களை செலவிட்டுள்ளார் திருத்தந்தை. ஆனால், தற்போது திருத்தந்தை மேற்கொள்ளும் திருப்பயணமோ 11 நாட்கள் 1 மணி 10 நிமிடங்களைக் கொண்ட நீண்ட பயணமாக உள்ளது. இதுபோல் இந்த 45ஆவது திருப்பயணம் தான் 32 ஆயிரத்து 814 கிலோமீட்டர் என்ற வகையில் இதுவரை உள்ள திருப்பயணங்களில் அதிக தூரத்தைக் கொண்டுள்ளதாக உள்ளது. இதற்கு முன்னர் 2018ஆம் ஆண்டு ஜனவரியில் சிலே மற்றும் பெரு நாடுகளுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மேற்கொண்ட திருப்பயணம் 30 ஆயிரத்து 334 கிலோமீட்டரை உள்ளடக்கியதாக இருந்தது.



ஆகவே திருப்பயண நாட்களையும் பயணம் செய்யும் தூரத்தையும் பொறுத்தவரையில் இதுவே மிகப் பெரும் பயணம். மேலும் அண்மை நாட்களில் உடல் நலம் குன்றி காணப்படும் திருத்தந்தை, அதிலும் டிசம்பர் மாதத்தில் 88 வயதை நிறைவுச் செய்யவுள்ள திருத்தந்தை, இந்த நீண்ட திருத்தூதுப்பயணத்தை நிறைவுச்செய்ய உள்ளார் என்றால் எவ்வளவு மனவுறுதியுடையவராக இருப்பார் என்பதும் புரிகிறது. திருத்தந்தையின் திருப்பயணங்கள் என்று நாம் எடுத்துக்கொண்டோமானால் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்கள் 1986ஆம் ஆண்டு நவம்பர் 18 முதல் டிசம்பர் முதலாம் திகதி வரை 13 நாட்கள் 6 மணி 15 நிமிடங்கள் பங்களாதேஷ், சிங்கப்பூர், பிஜி தீவு, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, செய்செலஸ் தீவு ஆகியவைகளில் 48 ஆயிரத்து 974 கிலோமீட்டர் பயணம் மேற்கொண்டதே மிகப்பெரிய திருப்பயணமாக நோக்கப்படுகிறது. இப்பயணத்தை திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்கள் மேற்கொண்டபோது அவருக்கு வயது 66 தான். 1920ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி பிறந்த அத்திருத்தந்தை 1986ல் மிக நீண்ட திருப்பயணத்தை மேற்கொண்டபோது 66 வயதினராக இருந்தார். ஆனால் 1936ஆம் ஆண்டு டிசம்பர் 17ல் பிறந்த தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 32 ஆயிரத்து 814 கிலோமீட்டர் தூரப் பயணத்தை 11 நாட்களில் மேற்கொள்ளும்போது அவரின் வயது 87 என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களும் 2008ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பன்னாட்டு இளையோர் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஆஸ்திரேலியாவுக்கு 32,836 கிலோமீட்டர் கொண்ட பயணத்தை மேற்கொண்டார். 1927 ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி பிறந்த அவருக்கு இத்திருப்பயணம் மேற்கொள்ளும்போது 81 வயது.

**அன்பு நெஞ்சங்களே, நான்கு நாடுகளில் தன் திருத்தூதுப்பயணத்தை மேற்கொள்ளும் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைபரப்புப்பணி பயணம் வெற்றியடைய நம் செபங்களை ஒப்படைப்போம்.**



## வாழ்த்துக்கள்

ஆரோக்கிய அன்னையின் திருவிழாவில் கனடா வாழ் இறை நெஞ்சங்களின் குடும்பங்கள் அன்னையின் அருட்காவலை பெற ஆசித்து வாழ்த்துக்களை கூறி மகிழ்கின்றேன்.

அருட்தந்தை பீட்டர் ஜிதேந்திரன்

## தூய அந்தோனியார் நவநாள்

ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் இரவு 7.00 மணிக்கு நவநாள் வழிபாடும் திருப்பலியும் நடைபெறும்.

## முதல் வெள்ளி நற்கருணை வழிபாடு

இரவு 7.00 மணிக்கு நற்கருணை வழிபாடும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.

## திருமுழுக்கு அருட்சாதனம்

தமது பிள்ளைகளுக்கு திருமுழுக்கு அருட்சாதனத்தை பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் மூன்று மாதங்களுக்கு முன்னதாக எமது பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## ஒப்புரவு அருட்சாதனம்

அனைத்து திருப்பலிகளின் முன்பும் பின்பும் அல்லது முன்னேற்பாட்டுடன் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

## திருமண அருட்சாதனம்

திருமண அருட்சாதனம் பெறவுள்ள புதிய மணமக்களின் கவனத்திற்கு: ஒரு வருடத்திற்கு முன்னர் பங்குத்தந்தைக்கு அறிவிக்க வேண்டும். ரொறன்ரோ மறைமாவட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட திருமண ஆயத்த வகுப்பில் பங்குபற்றி சான்றிதழ் பெறுவது கட்டாயமானதாகும்.